மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள்.
முன்னிலை: திரு.ஞா.நாகராஜன்,பி.இ.,ஏ.ஐ.டி.பி.எம்.பி.ஏ.பி.ஜி.எல்.,

ந.க.எண்:1040/2020/சிமா-2 நாள்: 04.01.2021.

பொருள்: மனைப்பிரிவு – மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சிவகங்கை மாவட்டம் - தேவகோட்டை வட்டம்/ஊராட்சி ஒன்றியம் - கண்ணங்கோட்டை ஊராட்சி/கிராமம் - சர்வே எண்கள்.193/16-இல் 5503.70 சமீ (1.36 ஏக்கர்) பரப்பளவு கொண்ட மனை இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:
1) மனுதாரர் திருமதி.A.ஆனந்தி அவர்களின் விண்ணப்பம் நாள்:23.12.2020.
2) அரசாணை எண்.18, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.04.02.2019.
3) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.04.05.2017.
4) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றிக்கை எண் 4367/2019-BA-2 நாள்: 06.11.2019.
5) மனுதாரர் கூராய்வுக்கட்டணம் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த நாள்:17.11.2020 மற்றும் நன்னிலைவரி செலுத்தி இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த நாள்: 04.01.2021
6) தானபத்திர ஆவண எண்.5029/2020, நாள்.29.12.2020
7. அரசாணை எண்:79, வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்:04.05.2017.
8. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/ போ, நாள்.24.12.2020.

உத்தரவு:

பார்வை 1-இல் கண்டுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட மனைப்பிரிவு கோரிக்கை பரீசீலிக்கப்பட்டு கீழ்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./ந.ஊ.து.இ.(சிமா)எண்.14/2020** என எண்ணிடப்பட்டு வரைபட நகலினை மேல்நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

மேலும் பார்வை 2,3 மற்றும் 4-ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒப்படைப்பு செய்யப்பட்ட உத்தேச மனைப்பிரிவு சாலையினை தார்சாலை (Block Topping) தன்மை கொண்டு அமைத்து சாலைகளின் இரு பக்கங்களிலும் வடிகால், துப்புரவு வசதி தேவையான பாலங்கள் நிர்வாக அதிகாரி நிர்ணயிக்கப்பட்ட மட்டத்திற்கும் அகலத்திற்கும் ஏற்ப மனுதாரரால் அமைக்கப்பட வேண்டும்.

பார்வை 7-இல் காணும் அரசாணையின்படி திட்டமில்லா பகுதிக்கான நில உபயோக மாற்ற விதிகள் 2017 விதி (3)-இன்படி உள்ளாட்சிக்கான கூராய்வுக் கட்டணமாக ரு.1000/- (ருபாய் ஆயிரம் மட்டும்) மற்றும் விதி (9)-இன் படி நில உபயோக மாற்ற கட்டணமாக மனுதாரர் மனையிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டுத் தொகையில் 3 % (3 விழுக்காடு) தொகையினை கீழ்கண்ட அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும். மேற்படி தொகை பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

0217 Urban Development - 60 Other Urban Development Schemes - 800 Other Receipts - AS Receipts Under Land use conversion charges - 27 Non Taxation fees - 09 collections.
DPC: 0217 60 800 AS 2790.

தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட இரண்டு வரைபட நகல்கள் இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.15(ஈ)-இன்படி அவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உள்ளாட்சி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும் அனுப்புமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உள்ளாட்சியால் மனைப்பிரிவு வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னரே மனைப்பிரிவு எந்தவித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்கொண்டு உத்தரவிற்காக ஊராட்சி மன்றத் தலைவர், கண்ணங்கோட்டை ஊராட்சி , சிவகங்கை மாவட்டம் அவர்களை அணுகுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மனுதாரரிடமிருந்து கூராய்வுக்கட்டணம், நன்னிலைவரி உரிய கணக்கில் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

4/1/2021

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
சிவகங்கை மாவட்டம்.

இணைப்பு :
மனைப்பிரிவு வரைபடம் மற்றும்
மனைப்பிரிவு நிபந்தனைகள் (இரண்டு தொகுப்பு)

04/01/2021 4/1/2021

பெறுநர்:

1. ஊராட்சி மன்றத் தலைவர்,
கண்ணங்கோட்டை ஊராட்சி
தேவகோட்டை ஊராட்சி ஒன்றியம்,
தேவகோட்டை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

2. திருமதி.A.ஆனந்தி,
க/பெ.அழகு,
350, முத்துராஜ் நகர்,
திருப்பத்தூர் ரோடு,
தேவகோட்டை,
சிவகங்கை மாவட்டம் - 630 303.

3. தொழில்நுட்ப வைப்பறை.